செய்தி வெளியீடு எண்: 182 நாள்: 28.02.2019

## செய்தி வெளியீடு

தமிழ்நாட்டின் ஆட்சிமொழி "தமிழ் மொழி" என்று அறிவிக்கப்பட்டு சட்டம் இயற்றப்பட்ட நாள்முதலாக அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித்திட்டச் செயலாக்கம் விரைந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது அரசின் விழுமிய நோக்கமான "இன்றும் தமிழ்" "என்றும் தமிழ்" வெற்றி பெற தமிழ் வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் அனைத்து மாவட்டங்களிலும் பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கம் நடத்தப்பெற்று வருகிறது

அன்னைத் தமிழிலேயே அலுவல் பணிகள் அனைத்தும் முழுமையாக நடைபெறும் வகையில் தரமணி, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சென்னை மாவட்ட ஆட்சிமொழிப் பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கம் 05.03.2019, 06.03.2019 ஆகிய நாள்களில் நடத்தப்பெற உள்ளன. ஆட்சிமொழிக் கருத்தரங்கில் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி தமிழ்ப் பண்பாடு (ம) தொல்லியல் துறை அமைச்சர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி இயக்குநர், மாவட்ட ஆட்சியர், மற்றும் அரசு உயர் அலுவலர்கள், தமிழ்ச்சான்றோர்கள் பங்கேற்று கருத்துரை வழங்க உள்ளனர்.

| | |
|---|---|
| நடைபெறும் இடம் | தரமணி உலகத் தமிழராய்ச்சி நிறுவனம்<br>பேரறிஞர் அண்ணா கருத்தரங்குக் கூடம் |
| நாள் | 05.03.2019, 06.03.2019 |

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9